மென்று திட்டத்தில் சேர்க்கப்பட்ட இடங்களில் புதிய டூரிஸ்ட் ஹோம் கட்டப்படும். செஞ்சியில் ஏற்படுத்துவது பரிசீலனையில் இருக்கிறது. எந்தெந்த இடத்தில் ஏற்படுத்தத் திட்டம் இருக்கிறது என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் கூற முடியும்.

பயணிகள் விடுதி

*556 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடலூர் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகளின் ஜோதியைப் பார்க்க வரும் யாத்ரீகர்களுக்காக வடலூரில் ஒரு டூரிஸ்ட் ஹோம் கட்ட உத்தேசமுண்டா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இல்லை, ஐயா.

மதிய உணவு

*557 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், செய்யாறு வட்டம், வெண்பாக்கம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கொடையம்பாக்கம் பள்ளிக்கூடத்தில் மதிய உணவுத் திட்டத்தில் நடைபெற்றுள்ள ஊழல்கள் பற்றி 1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ம் தேதியில் ஊராட்சி மன்றத் தலைவரும் ஊராரும் அரசாங்கத்துக்கு முறையீடு அனுப்பியுள்ளனரா ?

(இ) அப்படியானால் அதன்மீது அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் : (அ) ஆம், ஐயா.

(இ) முறையீட்டில் குறிப்பிட்டுள்ள குற்றசாட்டுக்கள் கல்வி இலாகா அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டு அவைகளுக்கு ஆதாரமில்லை என்று தீர்மானிக்கப்பட்டது.

புலவர் கா. கோவிந்தன் : அந்த ஆசிரியர் அப்போது உணவுத் திட்டத் தலைவராக இருந்தவருக்குத் தெரியாமலே பணத்தை வாங்கிக் கொண்டதாக அந்த வட்டக் கல்வி அதிகாரியும் யூனியன் கல்வி விஸ்தரிப்பு அதிகாரியும் ஸ்டேட்மெண்ட் வாங்கியிருக்கிறார்கள். ஆனால் மூன்று மாத காலம் வரையும் அப்பள்ளியைப் பார்வையிடவில்லை என்ற குற்றச்சாட்டு தம்மீது வரும் என்ற காரணத்தால் அதிகாரிகள் மீண்டும் அவரை அழைத்து வேறு ஒரு ஸ்டேட்மெண்ட் வாங்கியிருக்கிறார்கள். இதைப் பற்றி விசாரித்தார்கள் என்று சொல்லும்போது விசாரணையின்போது அந்த

மகஜரை அனுப்பியவர்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டதா? கல்வி அதிகாரி கூறியதால் அரசாங்கத்தார் ஏற்றுக் கொண்டார்கள் என்பது முறையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் அவர்கள் சர்க்கார் விசாரணை சரியல்ல என்றுதான் சொல்லுகிறார்கள். இதைப் பற்றி எல்லாம் விசாரணை செய்வதற்கு தலைமை அதிகாரி டி.பி.ஐ. இருக்கிறார். அவர் விசாரணை செய்து குற்றச்சாட்டுக்கு இடமில்லை என்று கூறியிருக்கிறார். அதுதான் சரி என்று அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது.

புலவர் கா. கோவிந்தன்: கல்வி அதிகாரியினுடைய அறிக்கையை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்வதாகச் சொன்னார்கள். அந்த அதிகாரியினுடைய அறிக்கையை நானும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அந்தக் கல்வி அதிகாரி குற்றச்சாட்டைக் கொடுத்த பஞ்சாயத்துத் தலைவரையும், அந்த ஊராரையும் விசாரித்தார்களா? அப்படியானால் அவர் யார் யாரை எந்த எந்தத் தேதியில் விசாரித்தார்? அவர்கள் ஸ்டேட்மெண்டில் அதைப்பற்றி என்ன கூறப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நிர்வாகத்திலே ஒரு அதிகாரியிடத்தில் 'விசாரணை நடத்துங்கள்' என்று சொன்னால் அந்த அதிகாரி யாரை விசாரிக்கவேண்டும், எப்போது விசாரிக்க வேண்டும், எந்த விதமாக விசாரிக்க வேண்டுமென்பதெல்லாம் அவருடைய பொறுப்பு. அந்த வகையில் டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் அவர் உசிதப்படி விசாரணை நடத்தி அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அங்கத்தினர் சொல்லுகிறபடிதான் விசாரணை நடக்க வேண்டுமென்று சொன்னால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. அதிகாரி எந்த முறையில் விசாரணை நடத்த வேண்டுமென்று நினைக்கிறார்களோ அந்த முறையில் விசாரணை நடத்தி இருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: அமைச்சர் அவர்கள் பதிலில் அங்கத்தினர் கூறுகிறபடி விசாரணை நடத்த முடியாது என்று சொன்னார்கள். அவர் கோரியது யாரை எப்படி விசாரணை செய்தார்கள் என்பதைத்தான். அதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அரசாங்கம், அதிகாரிகள் விசாரித்து அனுப்புகிற ரிப்போர்ட்டைப் பரிசீலனை செய்கிறதே தவிர, யாரை விசாரித்தார், எதை விசாரித்தார், எப்படி விசாரித்தார், என்ன வாக்குமூலம் வாங்கினார் என்பதையெல்லாம் கூர்ந்து பார்க்க இயலாது. நிர்வாகத் துறையிலே இதற்காகத் தலைமை அதிகாரி இருக்கிறார். அதிகாரி நியாயமான முறையில் விசாரிக்கவில்லை; தவறான முறையில் விசாரணை நடத்தினார் என்ற குற்றச்சாட்டைக் கனம் அங்கத்தினர் பொறுப்புடன் சொல்வதற்குத் தயாராக இருந்தால் அதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்யலாம்.

20th July 1961]

புலவர் கா. கோவிந்தன் : அமைச்சர் அவர்கள் கேட்டதற்காக நான் சொல்கிறேன். அந்தக் கல்வி அதிகாரி அந்தப் பஞ்சாயத்து யூனியன் தலைவரையோ, குற்றஞ்சாட்டி அனுப்பியிருக்கிறவர்களையோ விசாரிக்கவில்லை . . . 9-00 a.m.

MR. SPEAKER : The hon. Member cannot go into details. He can complain, if he wants, that such and such things were not being done. Then Government may make enquiries in whatever way they deem fit. This is not the place where the hon. Member can cross-examine the Hon. Minister on details.

புலவர் கா. கோவிந்தன் : அமைச்சர் அவர்கள் கூறிய காரணத்தால் அந்தக் கல்வி அதிகாரி சரியான முறையில் விசாரிக்கவில்லை என்று சொல்கிறேன். ஆகவே அப்படிப்பட்ட ஒரு விசாரணையை மீண்டும் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்த முறையில் சரியாக விசாரணை செய்யவில்லை, எந்த முறையில் அவர்கள் ப்ரஜுடிஸ்ஸாக விசாரணை செய்தார்கள் என்று கனம் அங்கத்தினர் கம்ப்ளெயின்ட் செய்து எழுதி அனுப்பினால் அதை சர்க்கார் பார்த்து அதன் பேரில் முடிவு செய்யும்.

கனம் சபாநாயகர் : அதைத்தான் சொல்கிறார்கள்.

திரு. வி. எஸ். எஸ். மணி : மதிய உணவுத் திட்டத்தில் இப்படிப் பலவிதமாக உணவு தயார் செய்து விநியோகம் செய்வதால் பலவித ஊழல்கள் ஏற்படுவதால் உணவு தயார் செய்து கொடுப்பதற்குப் பதிலாக ஏழை மாணவர்களுக்குப் பணமாக அவ்வப்போது கொடுத்துவிட்டால் அவர்கள் இஷ்டம் போல் தயார் செய்து கொள்வார்கள். அப்படிச் செய்ய உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தவிதமான உத்தேசமில்லை. வேறு பதில் சொல்லலாம். வேண்டாமென்று நினைக்கிறேன்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : நடத்தப்பட்ட விசாரணை பகிரங்க விசாரணையா ? அல்லது ரகசிய விசாரணையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : யார் யாரைப் பார்த்துக் கேட்கவேண்டுமோ, சம்பந்தப்பட்டவர்கள் யார் இருக்கிறார்கள் என்று நினைத்தார்களோ அவர்களை டி.பி.ஐ. அதிகாரிகள் மூலம் விசாரணை செய்தார்கள். இதில் ரகசியமும் இல்லை; பகிரங்க விசாரணை என்று எல்லோரையும் அழைத்து விசாரணை செய்யவும் இல்லை.

சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் (திருவாரூர்)

* 558 கேள்வி.—திரு. ப. ஜெயராஜ் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நன்னிலம் தாலுகாவின் தலைநகராகிய நன்னிலத்திலிருந்து சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டை திருவாரூருக்கு மாற்றி இருப்பதை மறுபடியும் நன்னிலத்திற்கு மாற்ற உத்தேசமுண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இல்லை.